O.S.No:24/2019
Date :16.03.2021
பெயர். திரு.சிரோண்மணி (DW-1)
வாதி தரப்பு குறுக்கு விசாரணை -

தாவா சொத்தின் பழைய பட்டா எண்.29 என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்தின் சர்வே எண்.271ல் மொத்தம் 9 ஏக்கர் 93 செண்டு என்றால் சரிதான். மேற்படி மொத்த சொத்தில் வடக்கே மரியநந்தல், கிழக்கே தவமணி, ஜோதிமுத்து, வேலமாணிக்கம், சாமுவேல் இடங்களும், மேற்கே வேலு, ஜெயராஜ் ஆகிய இடங்களும் உள்ளது. வழக்கு சொத்தில் 4, 10 பிரதிவாதிகளுக்கு பாத்தியம் இல்லை என்று சொன்னால் ஆறுமுகத்தேவருக்கு பாத்தியம் இருக்கிறது. வழக்கு சொத்து முழுவதும் 4ம் பிரதிவாதியின் தகப்பனார் கிரையம் வாங்கினார் என்று சொன்னால் சரியல்ல. 4ம் பிரதிவாதி, 8ம் பிரதிவாதிக்கு பத்திரம் எழுதி கொடுக்க உரிமையுடையது என்று சொன்னால் உரிமையில்லை. வழக்கு சொத்தில் 4ம் பிரதிவாதிக்கும், அவரது வாரிசுக்கும் உரிமையுடையது என்று சொன்னால் உரிமையில்லை. வழக்கு சொத்துக்கு செட்டில்மெண்ட் காலத்தில் சாமுவேல் மகன் இருளன் பெயரில் பட்டா ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. மேற்படி இருளன் பேரில் உள்ள பட்டாவை ரத்து செய்ய நான் மனு தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்கு பத்திரங்கள் ஏற்பட்டதாக 4ம் பிரதிவாதியின் எதிர் வழக்குரையில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் பொய்யானவை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்திற்கு என் கணவர் மீதும், 4ம் பிரதிவாதி மீதும் வாதி பட்டாவை ரத்து செய்ய மனு தாக்கல் செய்தார் என்று சொன்னால் நாங்கள் தான் மனு செய்தோம். மேற்படி நடவடிக்கையில் பட்டா நீண்டகாலத்திற்கு முன்பே ஏற்பட்டுள்ளதால் இராமநாதபுரம் மாவட்ட வருவாய் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்ய உத்தரவு ஏற்பட்டது என்று சொன்னால் சரிதான். இராமநாதபுரம் மாவட்ட வருவாய் அலுவலகத்தில் மேற்படி நடவடிக்கை நிலுவையில் உள்ள போது எனது கணவர் இறந்து விட்டார். பின்பு என்னை மேற்படி மனுவில் தரப்பினராக சேர்த்தார். இராமநாதபுரம் மாவட்ட வருவாய் அலுவலர் சிவில் நீதிமன்றத்திற்கு பரிகாரம் தேடி செல்ல சொன்னார் என்றால் சரிதான். மேற்படி உத்தரவின் அடிப்படையில் தான் வாதி இவ்வழக்கை தாக்கல் செய்தார் என்று சொன்னால் சரிதான். சர்வே எண்.271ல் தவறுதலாக இரண்டு முறை உட்பிரிவாகிவிட்டது என்று சொன்னால் தவறு. 10பிரதிவாதி செந்தூரன் பெயரில் ஏற்பட்ட பட்டாவை எதிர்த்து நான் வருவாய் கோட்டாட்சியரிடம் மீது மேல்நடவடிக்கை எடுத்தேன் என்று சொன்னால் சரிதான். மேற்படி விசாரணையில் ஏற்பட்ட உத்தரவை ஆவணமாக தாக்கல் செய்திருக்கிறேன். மேற்படி மனுவும் சிவில் நீதிமன்றத்தில் பரிகாரம் தேடி சொல்லி முடிக்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். வாதியின் தகப்பனார் பெயர் சாமுவேல் என்றால் தவறு. வாதியின் தகப்பனார் பெயர் மூலிக்கருப்பன். வாதியின் தகப்பனார் பெயரை மறுத்து நான் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். மேற்படி சாமுவேலுக்கு இருளன், அய்யாச்சாமி (5ம் பிரதிவாதி), வாதி என்று சொன்னால்

சரிதான். 5ம் பிரதிவாதி வாரிசு தான் 8, 9 ம் பிரதிவாதிகள் என்றால் சரிதான். இருளன் வாரிசு தான் 6, 7 ம் பிரதிவாதிகள் என்றால் சரிதான். செல்லத்துரை இறந்துவிட்டார். அவரது மனைவி கண்ணகி வேறு திருமணம் செய்துவிட்டார் என்று சொன்னால் தவறு. கண்ணகிக்கும், தாவா சொத்திற்கும் சம்மந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து எனது கணவரின் தகப்பன் வழி சொத்து. எனது கணவரின் தகப்பனார் பெயர் திரவியம். திரவியத்தின் பேரில் ஏதாவது ஆவணம் வைத்துள்ளேனா என்றால் இல்லை. வழக்கு சொத்திற்கு எனது கணவர் 4, 10 பிரதிவாதிகளின் பெயரில் தவறுதலாக பட்டா ஏற்பட்டது என்று சொன்னால் தவறு. ஆறுமுகத்தேவரும், செந்தூரனும் தாவா சொத்தை எக்காலத்திலும் அனுபவிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. செந்தூரன் தாவா சொத்தை அனுபவிக்கவில்லை. நானும், ஆறுமுகத்தேவரும் அனுபவித்தோம். தாவா சொத்தில் தவறுதலாக ஏற்பட்ட 1 முதல் 4 பிரதிவாதிகளும், 10 முதல் 14 பிரதிவாதிகளும், வாதிக்கும் 5 முதல் 9 பிரதிவாதிகளும் வீண் பிரச்சனை செய்து வருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்திற்கும், அரசாங்கத்திற்கும் சம்மந்தமில்லை என்பதால் அவர்களை அரசாங்கத்தை தரப்பினராக சேர்க்க வேண்டிய அவசியமில்லை என்று சொன்னால் சரியல்ல. சாமுவேல் மகன் இருளன் பெயரில் மற்ற வாரிசுகளுக்கு சேர்த்து தான் பட்டா ஏற்பட்டுள்ளது என்று சொன்னால் தவறு. எனது மாமனார் பெயரில் ஏற்பட்ட ஆவணங்களை தாக்கல் செய்யாத நிலையில் எனது வாதம் ஏற்புடையது என்று சொன்னால் தவறு. ஸ்தலத்தில் இரண்டு சொத்துக்களாக பிரிக்கப்பட்டது போல் சொத்து இல்லை என்றால் தவறு. 9 ஏக்கர் 93 செண்டு ஒரே இடமாக தான் உள்ளது என்றால் சரிதான். எனது எதிர் வழக்குரையிலும், நிரூபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளும் உண்மைக்கு புறம்பானவை என்று சொன்னால் சரியல்ல.

(ஒப்பம்/-R.கீதா)
மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
கடலாடி.